# ஓர் அன்னையைப் போல்...

***பி**.எஸ்.ஏ. அவர்களின் செக்ரெட்ரியும், சென்னை அலுவலகத்தின் மேலாளர்களில் ஒருவருமான **ஜே.எம். ஹஸன்** அவர்கள் சொல்கிறார்:*



## இறையருள் பெற்ற மாமனிதர் !

**எ**ங்களின் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பி.எஸ்.ஏ. வாப்பா அவர்களிடம் நான் *1969*ஆம் வருடம் வேலையில் சேர்ந்தேன். சிங்க முகம், வீர நடை கொண்டவர்கள் அவர்கள். தன் கடுமையான உழைப்பால், அனைத்துச் செல்வங்களும் பெற்று, புகழோடு திகழும், இறையருள் பெற்ற மாமனிதர்.

## கடமை, கண்ணியம், கட்டுப்பாடு !

**பி**.எஸ்.ஏ. என்ற மூன்றெழுத்துத் தாரக மந்திரம், உலகின் பல பாகங்களிலும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது என்றால், அதற்காகப் பாடுபட்டு உழைத்தவர்கள் அவர்கள்.

காலை *6:00* மணிக்கே வாப்பாவின் உழைப்பு தொடங்கிவிடும். வீட்டிலிருந்தபடியே, வெளிநாட்டில் உள்ள அலுவலக நிர்வாகிகளிடம் தொலைபேசியில் பேசி, நடப்புகளைத் தெரிந்துகொண்டு, செய்து முடிக்கவேண்டிய காரியங்களை 'அப்டேட்' செய்துவிடுவார்கள்.

பிறகு, சென்னை அலுவலகம் புறப்படுவதற்கு முன் "யார் யாருக்கு அப்பாயின்ட்மென்ட் கொடுத்திருக்கிறோம்?" என்று கேட்டு "இத்தனை, இத்தனை மணிக்கு வந்து விடுவோம்" என்று சொல்லச் சொல்வார்கள்.

பகல் உணவிற்கு, மதியம் *2:00* மணியளவில் வீட்டிற்குச் சென்றுவிட்டு, மீண்டும் மாலை *5:00* மணிக்கு அலுவலகம் வந்தால், திரும்பிப் போக இரவு *11:00* மணிகூட ஆகிவிடும்.

மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளை, அன்று இரவே நினைத்து, காலையில் முதல் வேலையாக, இரவு நினைத்ததைச் சொல்லிக்காட்டி, அதனைச் செயல்படுத்தச் சொல்வார்கள்.

## புரிந்து கொள்ளும் பொன்மனம்

**வெ**ளிநாடு செல்வதற்கு, விமானப் பயணச்சீட்டு எடுப்பதற்கு முன், 'புறப்படும் நேரம்' போய்ச் 'சேரும் நேரம்' எல்லாம் கேட்டுக் கொள்வார்கள். ஆனால், பயணம் போகும் அன்று, நான் பயண நேரத்தைக் கொஞ்சம் கூட்டிக்குறைத்துச் சொல்வேன். உதாரணத்திற்கு: மாலை *7:00* மணிக்கு புறப்பாடு என்றால், நான் "*6:15*க்கு விமானம் புறப்படும்" என்று சொல்லி வைப்பேன். காரணம்: அவர்கள் கடைசி நிமிடம் வரை ஏதாவது பிஸியாகவே இருப்பார்கள் என்பதால், அவர்கள் விமானத்தை தவறவிட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

ஆனால், விமான நிலையத்தை நெருங்கும் நேரத்தில், என்னிடம் "உண்மையைச் சொல்! எத்தனை மணிக்கு விமானம் புறப்படுகிறது?" என்று கேட்பார்கள்.

"இல்லை வாப்பா, *7:00* மணிக்குத்தான் புறப்படுகிறது. தாங்கள் நேரம் தவறி, விமானம் புறப்பட்டுவிட்டால், கால தாமதமும் பணவிரயமும் ஆகிவிடுமே" என்பேன். என்னைப் புரிந்துகொண்டு, பாராட்டும் விதமாய்ப் புன்னகைப்பார்கள்.

## வாப்பாவின் எளிமை !

**ஒ**ருமுறை, வாப்பா அவர்கள், கர்நாடகாவில் உள்ள காப்பி தோட்டத்தைப் பார்வையிடச் சென்னையிலிருந்து

காரில் சென்றபோது, என்னையும் அழைத்துச் சென்றார்கள்.

முதலில் பெங்களூர் சென்று, பிறகு மைசூர் வழியாகச் சென்று கொண்டிருந்தோம். இரவு 1:00 மணி ஆகிவிட்டது. 'நல்ல பசி' என்று 'ஏதாவது உணவு விடுதி தென்படுகிறதா?' என்று பார்க்கச் சொன்னார்கள். அந்த நேரத்தில், ஒரு சிறிய ரோட்டோரக் கடைதான் கண்ணில் பட்டது. வப்பா, காரை நிறுத்தச் சொன்னார்கள், நான் வாப்பாவிடம் "இங்கு தங்களுக்குரிய உணவு கிடைக்காது" என்று சொன்னேன்.

ஆனால், அவர்கள் காரிலிருந்து இறங்கி, நேராக அந்தச் சிறிய விடுதிக்குள் நுழைந்துவிட்டார்கள். அந்த ஹோட்டல் முதலாளி, வாப்பாவின் தோற்றத்தைப் பார்த்ததும் "தாங்கள் இங்குள்ள உணவைச் சாப்பிட மாட்டீர்கள்!" என்றார்.

"பரவாயில்லை, சாப்பிடுகிறேன்" என்று சொல்லி, பலகை பெஞ்ச்சில் அமர்ந்துகொண்டார்கள். தடித்த அரிசிச் சோறும் மீன் குழம்பும்தான் மெனு. அதன் விலை வெறும் 3 ரூபாய் தான். அதைச் சாப்பிட்டு முடித்துவிட்டு "சாப்பாடு நன்றாக இருக்கிறது" என்று விடுதி முதலாளியைப் பாராட்டினார்கள். அந்தக் கடைக்காரர் மகிழ்ச்சியில் மிகப் பரவசமாகிவிட்டார்.

அவ்வளவு எளிமையானவர்கள் வாப்பா அவர்கள்.

## வாப்பாவின் அன்பு!

**கோ**வையில் நடைபெற்ற ஒரு ஐக்கியப் பொருளாதாரப் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொள்ள, வாப்பா, விமான நிலையத்துக்கு சற்று நேரத்தோடேயே புறப்பட்டுவிட்டார்கள். வழியனுப்புவதற்காக நானும் உடன் சென்றேன். கிண்டி வந்தவுடன், "நான் ஏ.சி.எம்.ஐ (திரு. ஏ.சி. முத்தையா செட்டியார் அவர்களை)ப் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்; நீ சென்று, 'செக்கின்' செய்துவை!" என்று, என்னை அனுப்பிவிட்டார்கள்.

அன்று, விமான நிலையத்தில் 'பார்வையாளர்கள் செல்லத் தடை' விதித்திருந்ததைக் கவனிக்காமல், நான் உள்ளே சென்று; செக்கின் செய்துவிட்டு; வாப்பாவிடம் போர்டிங் கார்ட் கொடுக்க வெளியே வர முனைந்தால், "செக்கின் செய்த பிறகு வெளியே போகக் கூடாது!" என்று விமான நிலையக் காவலாளிகள் என்னைத் தடுத்துவிட்டார்கள்.

'என்ன செய்வது?' என்று தவித்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்தில், வாப்பா அவர்கள் வாசலில் வந்து நின்றார்கள். அவர்களிடம் செய்தியைக் கூறினேன். விபரத்தை புரிந்துகொண்ட அதிகாரிகள், வாப்பாவை அனுமதித்துவிட்டு, என்னைப் பிடித்து வைத்துக் கொண்டார்கள்.

வாப்பா அவர்கள், அதிகாரிகளிடம் "அவர் என் உதவியாளர். முதலில் 'செக்கின்' செய்வதற்காக நான்தான் அவரை அனுப்பிவைத்தேன். அவரை விடுவித்தால்தான், நான் பயணம் செய்வேன்..." என்று எனக்காக வாதாடி, என்னை மீட்டார்கள். என் மனம் மிகவும் சந்தோஷப்பட்டது.

## வாப்பாவின் உபசரிப்பு!

**வா**ப்பா அவர்கள், தன்னிடம் வேலை செய்பவர்கள் மீது எப்போதும் மிகுந்த அக்கறை காட்டுவார்கள்.

ஒருதடவை, எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் ஜானகி அம்மாள், உடல் நிலை சரியில்லாமல் இராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருந்தார். அவரை நலம் விசாரிப்பதற்காக வாப்பா அவர்கள் மருத்துவமனைக்குச் சென்றார்கள். நானும் உடன் சென்றிருந்தேன்.

நானும் டிரைவரும் வெளியே நின்று விட்டோம். வாப்பா மட்டும் உள்ளே சென்றார்கள். சிறிது நேரம் கழித்து, ஒருவர், சில பலகாரங்களையும் காபியையும் எனக்கும் டிரைவருக்கும் கொண்டுவந்து தந்து "உங்கள் ஐயா உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார்" என்று சொல்லி, கொடுத்துவிட்டுச் சென்றார்.

எவ்வளவு பெரிய பண்பு வாப்பா அவர்களுக்கு! 'தான் மட்டும் சாப்பிட்டால் போதும்!' என்றில்லாமல், தன்னுடன் வந்த எங்களுக்கும் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்களே!

## அடுத்தவர் நலனில் அக்கறை!

**ஐ**க்கியப் பொருளாதாரப் பேரவையின் ஆண்டுக் கூட்டம் ஒன்று கொடைக்கானலில் நடைபெற்றது. வாப்பாவுடன் ஜனாப் வி.என்.ஏ. ஜலால், நான், மற்றும் சிலர் கொடைக்கானல் சென்றோம். ஐந்து நட்சத்திர ஹோட்டல் கேல்ட்ரானில், ஸ்வீட் ஒன்றில், வாப்பாவைத் தங்கவைத்தார்கள். *(ஸ்வீட் என்றால், ஒரு ஃப்ளாட்' போல, பெட்ரூம், கிச்சன், ஹால் எல்லாம் கொண்ட ஹோட்டல் ரூம்)* வாப்பா அவர்கள், என்னையும் தங்களுடனேயே தங்கிவிடச் சொன்னார்கள்.

ஹோட்டலில் உள்ள உணவகத்தில் காலைச்சிற்றுண்டி

சாப்பிட, வாப்பா அவர்கள் என்னையும் அழைத்துச் சென்றார்கள். மறுநாள் மதியம், வாப்பா அவர்கள், ஒரு பிரமுகரின் வீட்டிற்கு, விருந்துக்குப் போகவேண்டியது இருந்ததால், விடுதியில் இருந்த ஒரு மதுரைக்காரரிடம் என்னைக் காட்டி "இவர் நாளை மதியம் இங்கு சாப்பிட வருவார், கவனித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

மறுநாள் காலையில் சாப்பிடச் சென்ற பொழுது, அதே ஆளிடம் என்னைச் சுட்டிக்காட்டி "நேற்று இவர் இங்கு சாப்பிட வந்தாரா?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

தன்னிடம் வேலை பார்ப்பவர்களின் நலனிலும் மிகுந்த அக்கறை காட்டுவார்கள் வாப்பா!

## வெற்றிக்கு வழிகாட்டி!

ஓய்வே இல்லாமல் சுறுசுறுப்பாய் உழைத்தவர்கள் வாப்பா. தான் மட்டும் நன்றாய் வாழ்ந்தால் போதும் என்று எண்ணாது, தன் சொந்த பந்தங்களின் பிள்ளைகள் பலர், நல்ல கல்வி கற்று இருப்பதை அறிந்து, அவர்களை அழைத்து, பல பொறுப்புகள் கொடுப்பார்கள்.

பொது வாழ்வில் தூய்மை; சொன்ன வாக்கைக் காப்பாற்றுதல்; மற்றவர்களுக்கு உதவும் மனம்; நினைத்ததைச் சாதிக்கும் குணம்; போன்ற வாப்பாவிடம் உள்ள மேன்மையான இயல்புகளை மட்டும் ஒருவர் பின்பற்றினாலே போதும். நிச்சயம் வாப்பாவைப்போல் ஒரு சிகரத்தை அவராலும் தொடமுடியும்! எவ்வளவுதான் பணம் வந்தாலும், குணம் மாறாத உயர்ந்த மனிதர் வாப்பா அவர்கள்!

அந்த மாமனிதரிடம் வேலை செய்வதை அல்லாஹ் எனக்குக் கொடுத்த பாக்கியமாகக் கருதுகிறேன்.

***